மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் சொன்ன கருத்தை பரிசீலிக்கலாம்.

கல்லணையைப் பலப்படுத்தல்.

***446 வினா—திரு. வை. சாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஸ், லாரி போன்ற வாகனங்களின் போக்குவரத்து தொடங்கும் வண்ணம் கல்லணையை பலப்படுத்தும் யோசனையை அரசு பரிசீலித்ததா ?

(இ) அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அத்தகைய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு ஆர். கருப்பையா : திருச்சியில் இருந்து கும்பகோணம் செல்வதற்கு அந்தப் பகுதி ரோடை சரியானபடி அமைத்தால் நலமாக இருக்கும். ஆகவே இனிமேலாவது அந்த ரோடை அகலப்படுத்தி லாரிகள், பஸ்கள் போவதற்கு ஏற்பாடு செய்ய வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது, கல்லணையைப் பலப்படுத்தல் பற்றிய கேள்வி.

'Gheraos' in Coimbatore.

***447 *Q.*—THIRU N. S. V. CHITHAN AND THIRU K. VINAYAKAM :** Will the Hon. Minister for Labour be pleased to state whether a number of arrests have been effected in Coimbatore in connection with gheraos in April 1968 ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : "கெரோ" என்ற பெயரிலோ அல்லது வேறு எவ்வகையிலோ சட்டம் மீறப்பட்ட இடத்திலெல்லாம் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. என். எஸ். வி சித்தன் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று சமுதாயத்தைப் பீடித்திருக்கிற ஒரு கொடிய தொத்து நோயான இந்த கெரோ பலயிடங்களில் பரவலாக நடந்து வருகிறது. அதன்மேல் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழிவகைகள் இருந்தாலும் அப்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசு தயக்கம் காட்டுவது ஏன் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தமிழ்நாட்டில் பரவலாக கெரோ பாவி வருகிறது என்பதை அரசு ஒத்துக்கொள்ளாது. எங்கெங்கு கெரோ செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். [illegible]க்குகள் போடப்பட்டிருக்கின்றன. சமாதானம் ஏற்பட்ட பிறகு சிலயிடங்களில் வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : This instrument of ghearoing employers, principals, teachers, or vice-chancellor, is it a constitutionally admitted instrument or is this staging of protest against the superiors conceived only by the leftists organisations in this country ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : யார் கெரோ செய்தாலும் சட்டப்படி அதை அனுமதிக்க முடியாது என்று அரசு ஏற்கனவே அறிவித்திருக்கிறது. அது லெஃப்டிஸ்ட் ஆனாலும் சரி, ரைட்டிஸ்ட் ஆனாலும் சரி, காங்கிரஸானாலும் சரி, யார் செய்தாலும் சரி சட்டப்படி அரசு அதை அனுமதிக்காது.